


15.05.2023

# 14. இதுவே, தெய்வ இரக்கம்!

இந்த உலகத்தில் ஜனங்கள், உடல் ஊனமுற்றோருக்காக “கருணை இல்லம்” (Mercy Home) கட்டுகிறார்கள். கருணை இல்லம் என்ற பெயருக்கு இணையாய் “தகுதியுள்ளோர்க்கு அடைக்கல இல்லம்” (Home for the deserved) என்றும் பெயர் சூட்டுகிறார்கள். அதாவது, இவர்களுடைய இரக்கத்திற்கு, இதுபோன்ற ஏழை ஜனங்கள் மாத்திரமே தகுதியுடையவர்கள்! ஆனால், ஆண்டவருடைய இரக்கத்தை சுதந்தரித்த ஒரு மனிதன் “தகுதியில்லாதவர்கள் மீதும்” (Undeserved) இரக்கத்தை அல்லது கருணையை காட்டுவான்! காரியம் இப்படியாயிருக்க இவர்கள் மிக மோசமான பாவிகளாகிய விபச்சாரக்காரர்களிடத்திலும், குடிகாரர் களிடத்திலும், வீழ்ச்சியடையும் சகோதர சகோதரிகளிடத்திலும்..... இரக்க முள்ளவர்களாகவே இருப்பார்கள் என்பது அதிக நிச்சயமல்லவா? இதுவே தேவ இரக்கத்தின் மெய்யான நிரூபணமாகும் (மத்.5:45).

– ரத்னம்